இதழ்-93

01.03.2026

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. விநோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 அதிகார மட்டத்தில் எடுக்கப்படும் சமூக நலன் சார் துணிச்சலான முடிவுகள் வரவேற்கத்தக்கவை

06 மதம் பிடிக்காத வரை மனிதனைப் போலத்தான் யானைகளும்

10 அகம் எவ்வாறோ!! புறமும் அவ்வாறே.

14 மனம் ஒரு மாய ஊஞ்சல்

18 சிகரம் தொடும் சிங்கப்பெண்கள். தடைகளைத் தகர்த்த சாதனையின் வரலாறு

24 தமிழரின் பண்பாட்டையும் அடையாளத்தையும் தாங்கும் தமிழ்மொழி

27 78-ல் இலங்கை: முதுமையற்ற முதிர்ச்சி! தேசத்தின் நரைக்குள் மின்னும் ஞானம்.

30 நரியும் இறைச்சித் துண்டும்

32 வீழ்ச்சிப் பாதையில் பயணிக்கிறதா அவுஸ்ரேலியா கிரிக்கெட் அணி?

ஆசிரியர் பதிவு

# அதிகார மட்டத்தில் எடுக்கப்படும் சமூக நலன் சார் துணிச்சலான முடிவுகள் வரவேற்கத்தக்கவை

சமூகத்தின் ஒழுக்கமும் சுகாதாரமும் தனிமனிதப் பழக்கவழக்கங்களில் இருந்தே தொடங்குகின்றன. ஒரு தேசத்தின் உண்மையான வளர்ச்சி என்பது பெரிய கட்டடங்களில் இல்லை, மாறாக அந்த நாட்டு மக்கள் பொது இடங்களில் நடந்துகொள்ளும் விதத்தில்தான் தங்கியுள்ளது. அந்த வகையில், அண்மைக்காலமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ளூராட்சி சபைகளும் அரச திணைக்களங்களும் மேற்கொண்டு வரும் அதிரடியான மற்றும் அவசியமான சட்ட மாற்றங்கள் பாராட்டுக்குரியவை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முதல் மூதூர் பிரதேச சபை வரை எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானங்கள், ஒரு நாகரிகமான சமூகத்தை நோக்கிய எமது பயணத்தின் மைல்கற்களாக அமைகின்றன.





யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தில் வெற்றிலை பயன்பாடு மற்றும் எச்சில் துப்புதலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை என்பது வெறுமனே ஒரு ஒழுக்கக்கட்டுப்பாடு மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் சுகாதார விழிப்புணர்வின் தொடக்கப்புள்ளியாகும். பொது இடங்களில் எச்சில் துப்புவது என்பது நோய்க்கிருமிகள் பரவுவதற்கு மிக முக்கிய காரணியாக அமைகின்றது. குறிப்பாக வைத்தியசாலை போன்ற நோயாளிகள் அதிகம் கூடும் இடங்களில் இத்தகைய கட்டுப்பாடுகள் அத்தியாவசியமானவை. அதேநேரம், இந்த விதிகள் படிப்படியாக ஏனைய பொது இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பொதுமக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு எச்சில் துப்புவதற்கென பிரத்தியேக தொட்டிகளை அறிமுகப்படுத்துவது என்பது அமுலாக்கப்படும் சட்டத்தை மக்கள் சுலபமாகப் பின்பற்றுவதற்கு வழிவகுக்கும். இது சுகாதாரமான ஒரு சூழலை உருவாக்குவதுடன், அடுத்த தலைமுறைக்கு ஒரு சிறந்த பொது இடப் பண்பாட்டைக் கற்றுக்கொடுக்கும்.

இதேபோன்று, மானிப்பாய் பிரதேச சபையினால் இறுதி ஊர்வலங்களில் பட்டாசு வெடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டண நடைமுறையானது, தேவையற்ற ஆடம்பரங்களையும் ஒலி மற்றும் வளி மாசடைதலையும் கட்டுப்படுத்தும் ஒரு புரட்சிகரமான முடிவாகும். துக்க வீடுகளில் பட்டாசு வெடிப்பது என்பது பண்பாட்டு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் தேவையற்ற ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. இத்தகைய சட்டங்கள் மூலம் மக்களின் வீண் விரயங்கள் தடுக்கப்படுவதுடன், அயலவர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஏற்படும் அசௌகரியங்கள் தவிர்க்கப்படுகின்றன.

அதேபோல, மூதூர் பிரதேச சபை முடிவெட்டும் கட்டணங்களை வரன்முறைப்படுத்த எடுத்திருக்கும் முயற்சியானது, நுகர்வோர் நலனைப் பேணுவதில் உள்ளூராட்சி அமைப்புகளின் பொறுப்பை உறுதிப்படுத்துகிறது. அத்தியாவசிய சேவைகளில் தன்னிச்சையான விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவது சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் ஒரு சமூக நீதியாகும்.



அரச திணைக்களங்களும் ஏனைய உள்ளூராட்சி அமைப்புகளும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள் நின்று இத்தகைய ஆக்கபூர்வமான விதிகளை நடைமுறைப் படுத்துவது பாராட்டுக்குரியது. இத்தகைய சட்டங்களில் சில நேரங்களில் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படுவதாகச் சிறு விமர்சனங்கள் எழுந்தாலும், அவை பொதுநலன் கருதியவை என்பதால் நீண்டகால அடிப்படையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். அபராதங்கள் மற்றும் சட்ட திட்டங்கள் என்பன மக்களைத் தண்டிப்பதற்காக அல்லாமல், அவர்களை ஒரு நேர்த்தியான சமூகக் கட்டமைப்பிற்குள் வழிநடத்துவதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். இத்தகைய சிறிய அளவிலான மாற்றங்கள் ஒன்றிணையும்போது, ஒட்டுமொத்த தேசமும் ஒழுக்கமான மற்றும் சுகாதாரமான பாதையில் பயணிக்கத் தொடங்கும் என்பதில் ஐயமில்லை. அதிகார மட்டத்தில் எடுக்கப்படும் இத்தகைய துணிச்சலான முடிவுகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கும் பட்சத்தில், ஒரு சிறந்த முன்மாதிரியான சமூகத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும்.





# மதம் பிடிக்காத வரை மனிதனைப் போலத்தான் யானைகளும்

காட்டின் அரசன் சிங்கம் என்றாலும் அந்த மாமிசம் உண்ணும் சிங்கமே கண்டு அஞ்சும் விலங்காக யானை உள்ளது. காட்டை ஆள்வது சிங்கமாக இருந்தாலும் காட்டை உருவாக்குவது யானைகள் என்ற சுவாரசியம் தெரியுமா உங்களுக்கு?

யானைகள் தாவர உண்ணிகள் என்பது நாம் அனைவரும் அறிந்தது. இவை ஒரு நாளில் மட்டும் 16 மணி நேரம் உணவு சேகரிப்பதில் ஈடுபடுகின்றன. பொதுவாக நன்கு வளர்ந்த பெரிய யானைகள் ஒரு நாளைக்கு 140 முதல் 270 கிலோ வரை உணவுகளை உட்கொள்ளும். ஆனால் இதனுடைய செரிமானம் என்பது மந்தத்தன்மையாகத்தான் இருக்கும்.இவை சாப்பிடும் பல உணவுகள் செரிமானம் இல்லாமல் சாணத்தின் வழியாக அப்படியே வெளியேறிவிடும். இவ்வாறு வெளியேறும் சாணத்தில் பல பழங்களின் விதைகள் இருக்கும். இவை தான் முளைத்து காடுகளாக வளர்கின்றன.

இவ்வாறு கூட்டமாக வாழும் யானைகள் காடுகளில் உள்ள பல பழங்களை உண்டு அதனை சாணமாக வெளியேற்றும் பொழுது அதிலிருந்து பலவகையான செடிகளாக வளர்கின்றன. மேலும் இவை நடந்து செல்லும் வழிகளில் பல பெரிய மரங்களின் கிளைகளை உடைத்து சூரிய ஒளி தரையில் படும் அளவிற்கு வசதிகளை ஏற்படுத்தி செல்கின்றன.

இதனால் காட்டில் மழை பெய்து, தரையில் சூரிய ஒளி படும் போது அந்த சாணத்தில் இருந்து பல வகையான செடிகள் மீண்டும் முளைத்து காடுகளாக மாறுகிறது.

மேலும் இவை நடந்து செல்லும் போது காட்டில் வழித்தடத்தை ஏற்படுத்துகின்றன. காட்டில் வாழும் சிறிய வகை உயிரினங்கள் உணவுகளை தேடிச் செல்வதற்கு இவை பெரும் பங்களிக்கின்றன. நீர் நிலைகளில் இவை இறங்கி நீர் அருந்தும் பொழுது அங்கு பள்ளம் தோன்றி செயற்கையான நீர் குட்டைகள் உருவாகின்றன. இதனால் காட்டில் வாழும் மற்ற விலங்குகள் எளிமையாக நீர் அருந்துவதற்கு இவை உதவுகின்றன. இவ்வாறு காடுகளை உருவாக்குவதில் யானைகளின் கூட்டம் பெருமளவில் உதவுகிறது. இதனால்தான் யானை இருந்தால் ஆயிரம் பொன் எனக் கூறுகிறார்கள்.

யானை இறந்த பிறகு அதனுடைய உடல் காட்டில் வாழும் மற்ற விலங்குகளுக்கு உணவாக நீண்ட நாட்களுக்கு பயன்படுகிறது. மேலும் யானையின் தந்தம் விலை மதிக்க முடியாத பொருளாக இருக்கிறது. எனவே யானையின் தந்தத்திற்கு வணிக சந்தையில் நல்ல மதிப்பு இருக்கிறது. மேலும் ஆப்பிரிக்காவில் யானைகள் அதிகம் வாழகின்றன. அந்த நாட்டில் தந்தங்களுக்காக யானைகள் அதிகமாக கொல்லப்படுவதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.இதனால்தான் யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று கூறுகிறார்கள்.

இலக்கியங்களில் மா, வேழம், கரி, சிந்தூரம், அத்தி, அருகு, ஆம்பல், அலுவல், இபம், இம்மடி, கைம்மா போன்ற 50ற்கும் அதிகமான பெயர்களில் அழைக்கப்படும் விலங்கு யானை. தமிழர்களில் வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் ஒரு பெரிய உயிரினம் யானையாகும். புதர் ஒன்றில் தனது கூட்டத்துடன் மேய்ந்துகொண்டிருந்த ஆண் யானை, நீர்நிலை ஒன்றில் பதுங்கியிருந்து தன்னைத் தாக்க வந்த புலியை தனது கூரிய தந்தத்தால் குத்தி கொன்று, தந்தத்தில் வழியும் குருதியை கொட்டும் மழை நீரில் கழுவி விட்டு மலைச்சரிவில் இறங்கி தனது கூட்டத்துடன் சேர்ந்துகொண்டது என்கிறது கபிலர் எழுதிய அகநானூற்றுப் பாடல் ஒன்று. புலியைக் கொல்லும் யானையை போரில் ஒருவன் கொல்கிறான், அதுவும் ஆயிரம் யானைகளைக் கொன்று குவிக்கிறான் என்றால் அவனைப் போற்றி பாடாமல் இருக்க முடியுமா? அப்படி அமைந்தது தான் பரணி இலக்கியம்.

இது ஒருபுறம் என்றால், புலியை முறத்தால் விரட்டிய தமிழச்சியை பற்றி அறிகிறோம். யானையை அடக்கிய ஒரு தமிழ்ச்சியை பற்றி அறிவோமா.. அதுவும் ஓர் ஈழத்து தமிழச்சியைப் பற்றி அறிவோமா... வன்னியில், மதங் கொண்ட யானையை அடக்கிய 'அரியாத்தை' என்ற பெண்ணின் வரலாற்றைக் கூறும் “வேழம்படுத்த வீராங்கனை”என்னும் நாட்டுக்கூத்தை செல்லத்துரை என்பவர் எழுதியுள்ளார்.

”வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்”

எனத் தன்னுடைய திருமணக்கனவைப் பற்றி நாச்சியார் திருமொழியில் கூறுகிறார் ஆண்டாள். அதாவது, திருமால், ஆயிரம் யானைகள் சூழ வருகிறார். அக்காட்சியைக் காணும் மக்கள், பாதையின் இரு புறமும் பொற்குடங்களை வைத்து, தோரணங்கள் கட்டி வரவேற்பதாகக் கனவு கண்டதை தன் தோழியிடம் ஆண்டாள் கூறுவதாக அமைகிறது அப்பாடல்.

”நசைபெரிது உடையார் நல்கலும் நல்குவார்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின் தோழி! அவர் சென்ற ஆறே” — குறுந்தொகை.

பிரிந்து சென்ற காதலன் விரைவில் வருவான் எனத் தோழி, தலைவியிடம் கூறுவதாக அமைந்திருக்கும் இப்பாடலில், தலைவன் சென்ற பாலை நிலத்தில், வலிமையான ஆண் யானை, மென்மையான கிளைகளை உடைத்து பெண் யானைக்குக் கொடுக்கும் காட்சி இருக்கும். அதனைப் பார்க்கும் தலைவன், விரைவில் வந்து சேர்வான் எனக் கவலையில் இருக்கும் தலைவிக்கு தோழி கூறுகிறாள். காதலிலும் யானை இன்றியமையாததாக உள்ளது என்பதை மேற்கண்ட இரு பாடல்களின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

”கொம்புளதற்கு ஐந்து குதிரைக்கு பத்துமுழம்
வெம்புகரிக்கு ஆயிரம்தான் வேண்டுமே — வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி” - நீதி வெண்பா

இப்பாடலில், கொம்பிருக்கும் விலங்குகள் இருக்கிறது என்றால் அது இருக்கும் இடத்தில் இருந்து ஐந்து முழம் தள்ளி நிற்க வேண்டும். குதிரையாக இருந்தால் பத்து முழம் தள்ளி நிற்க வேண்டும், அதே யானையாக இருந்தால் ஆயிரம் முழம் தள்ளி நிற்க வேண்டும். அதே போல், தீயோரைக் கண்டால் கண் காணாத தூரத்திற்கு ஓடிவிடுங்கள் என்று கூறுகிறது இப்பாடல். மிகப்பெரிய விலங்கான யானையை விட ஆபத்தானவன் மனிதன் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

இவ்வாறு யானைகளை சங்க காலத்தில் பல்வேறு தளங்களில் உவமானமாக பயன்படுத்தியுள்ளார்கள். மனிதர்கள் தங்கள் முன்னோடியாக யானைகளை என்றும் மதித்து வந்திருக்கிறார்கள். யானைகள் நிறைய பாடங்களை மனிதனுக்கு போதித்திருக்கின்றன. அட்டையைப் பாருங்கள். அதிலும் ஒரு சில பாடங்கள் உங்களுக்கு இருக்கும். தாய் யானை பாராமரிப்பில் அதன் குட்டி யானைகள் சகோதர பாசத்தில் விளையாடுகின்றன.

குடும்பங்களுக்குள் ஒற்றுமை குலையாமல் இருப்பது காடுகளில் மட்டும் தான் என்றான் ஒரு கவிஞன். உண்மைதான் போலும்...! மதம் பிடிக்காத வரை மனிதனைப் போலத்தான் யானைகளும்.






பிந்துஜா காளிதாஸ்
B.A (Hons) உளவியல்,
4ம் ஆண்டு இளங்கலை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வாழ்க்கையானது உள்ளிருந்து வெளியே வாழப்படுகிறது. புறத்தில் நீங்கள் செய்யும் அனைத்தும் உங்கள் அகத்தில் இருக்கும் உங்களது அக உணர்வு, கருத்து, மதிப்பீடுகளால் தீர்மானிக்கபடுகின்றன.அவை தெளிவானவையாக இருந்தாலும் சரி எவ்வளவு குழப்பமானவையாக இருந்தாலும் சரி.உங்களுக்கு எவ்வளவு அளவு அகப்புற தெளிவு இருக்கிறதோ வெளியுலகில் உங்கள் செயற்பாடுகள் அவ்வளவு அதிக துல்லியமானவையாகவும் பலனளிப்பவையாகவும் இருக்கும்.உங்களது மதிப்பீடுகள்தான் உங்களை பற்றியும் உங்களை சுற்றியுள்ள உலகத்தை பற்றியுமான உங்களது நம்பிக்கைகளை தீர்மானிக்கின்றன. அன்பு,மனிதாபிமானம்,கருணை,நேசம் போன்ற நேர்மறையான மதிப்பீடுகளை நீங்கள் கொண்டு காணப்பட்டால் வெளியுலகில் ஒரு நேர்மறையான மனிதராக திகழ்வீர்கள். மக்களுடைய புற வாழ்வின் சூழ்நிலைகளை பார்ப்பதன் மூலம் பெரும்பாலான நேரங்களில் அவர்கள் எப்படி சிந்திக்கிறார்கள் என்பதை உங்களால் கூறிவிட முடியும்.

மனதளவில் ஒரு நேர்மறையான தன்னம்பிக்கையும் இலக்குகளும் கொண்ட,எதிர்காலத்தை நோக்கி நடை போடுகின்ற ஒருவர், பெரும்பாலான நேரம் வெளிப்புற வாழ்வில் மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் செல்வ செழிப்புடன் இருப்பார்.

“வாழ்வில் சொந்த மகிழ்ச்சியை அடைவது தான் மனித வாழ்வின் உச்சகட்ட குறிக்கோள் அல்லது இலக்கு என்று அரிஸ்டோடில் கூறியுள்ளார்.அதாவது புற உலகில் நீங்கள் செய்பவை உங்களது உள்ளார்ந்த மதிப்பீடுகளுடன் ஒத்திசைவாக இருக்கும் போது நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள்.உங்கள் இலக்குகள் உங்கள் மதிபீடுகளுடன் ஒத்திசைவாக இருக்க வேண்டும்.உங்கள் மதிப்பீடுகள் உங்களது இலக்குடன் ஒத்திசைவாக இருக்க வேண்டும். அதுவே உயர்ந்த சாதனைக்கும் உயர் செயற்திறனுக்கும் ஆரம்பமாக இருக்கிறது. உங்கள் வாழ்வில் உங்களுக்கு உண்மையிலே எது முக்கியம் என்பதை நீங்கள் தான் தெளிவாக சிந்திக்க வேண்டும். இல்லையெனில், ஒவ்வொரு சாதனையும் இன்னொரு வெற்றிடமாக மாறும். பலர் தங்கள் உள்ளே இருக்கும் வெற்றிடத்தை வேலை, உறவு, பணம், மதிப்பு ஆகியவற்றால் நிரப்ப முயல்கிறார்கள். ஆனால் உள்ளே தெளிவு இல்லாத இடத்தில் எதை வைத்தாலும் அது நிரம்பாது. ஏனெனில், வெற்றிடம் என்பது வெளிப்புறக் குறைபாடு அல்ல் அது உள் முரண்பாடு. நீங்கள் வாழும் வாழ்க்கை, நீங்கள் மதிப்பதாக சொல்லும் விஷயங்களுக்கு எதிராக நகரும் போது உருவாகும் கசப்பான அனுபவம் தான் அது.

நீங்கள் உங்களுக்குள் நிலைப்படுத்தியுள்ள மதிப்பீடுகளுக்கு முரணான ஒரு வழியில் புற உலகில் நீங்கள் வாழ முயற்சித்தால்,அது உங்களுக்கு மன அழுத்தத்தையும் மகிழ்ச்சியின்மையையும் அவநம்பிக்கையையும் கோபத்தையும் வெறுப்பையும் விரக்தியையும் விளைவிக்கும். எனவே நீங்கள் செய்யும் அனைத்திலும் உங்கள் மதிப்பீடுகளை பற்றி முழுமையான தெளிவை உருவாக்கிகொள்வது தான் ஒரு அழகான நிம்மதியான வாழ்க்கையை வாழ சிறந்த வழி. வெற்றிக்கான ஏணியின் மீது தட்டுதடுமாறி நீங்கள் ஏறும்பபோது,அது சரியான சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.- என ஸ்டீவன் கவி கூறுகிறார். அதாவது நீங்கள் வேகமாக ஏறிக்கொண்டிருக்கலாம். கை கிழிந்து, மூச்சு திணறி, இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்த ஏணி தவறான சுவரில் சாய்ந்திருந்தால்? உச்சத்தை அடைந்த பிறகுதான் உண்மை புரியும். அப்போது திரும்பி வர சக்தி இருக்காது. தம்முடைய உண்மையான விருப்பம் இதுதான்

என்று நினைத்துக்கொண்டு தங்கள் இலக்குகளை அடைவதற்காக கடினமாக உழைக்கும் பலர்,இறுதியில் தம் சாதனைகளில் எந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் தமக்கு கிடைக்காமல் போவதை காண்கிறார்கள். இதனால் தான், வாழ்க்கையில் மிகத் துணிச்சலான செயல் என்னவென்றால் தன்னைத் தானே நேர்மையாகக் கேள்வி கேட்பது.

•நான் ஓடிக்கொண்டிருக்கும் இந்த இலக்கு, உண்மையில் எனது அகஉணர்வில் இருந்து பிறந்ததா?

•இல்லையெனில், பிறர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் முயற்சியா?

•இந்த வாழ்க்கையை 10 வருடங்கள் வாழ்ந்தால், நான் என்னை மதிப்பேனா?

இவ்வாறு உங்களை நீங்களே கேட்டு அதற்கு பதில் அளிக்கும் போது சரியான பாதையில் பயணிப்பவராக உணர்வீர்கள்.Viktor Frankl கூறியது போல, மனிதன் மகிழ்ச்சியைத் துரத்துவதால் அல்ல—அர்த்தத்தை உணர்வதனால் வாழ்கிறான். அந்த அர்த்தம், உங்கள் மதிப்பீடுகளோடு ஒத்திசைவாக வாழும் தருணங்களில் மட்டுமே உருவாகிறது. அதனால்தான், கடினமான வாழ்க்கையிலும் சிலர் அமைதியாக இருக்கிறார்கள் எல்லாம் இருந்தும் சிலர் உடைந்து போகிறார்கள். உண்மையில் மாற்றம் தொடங்குவது எங்கேயென்றால்- நீங்கள் உங்கள் வாழ்க்கையை மறுபரிசீலனை செய்யும் அந்த அமைதியான தருணத்தில்.

“நான் இவ்வளவு தூரம் வந்துவிட்டேன், ஆனால் இது நான் விரும்பிய வாழ்க்கையா?” என்று நேர்மையாக கேட்கும் போது. அந்தக் கேள்வியிலிருந்து தப்பிக்காதீர்கள்.ஏனெனில் அதற்கான பதில் தான் உங்கள் அடுத்த வாழ்க்கையாக மாறும்.வெளியுலகம் உங்களை மதிக்க வேண்டும் என்ற ஆசையை விடுங்கள்.உங்கள் அகமே உங்களை மதிக்கிறதா என்று பாருங்கள்.

ஒரு நிம்மதியான வாழ்க்கை என்பது பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை அல்ல. அது உங்கள் மதிப்பீடுகளுடன் நேர்மையாகப் போராடும் வாழ்க்கை.நீங்கள் எதை இழக்கத் தயாராக இருக்கிறீர்களோ, அதுவே உங்கள் உண்மையான மதிப்பீடு.நீங்கள் எதற்காக “இல்லை” என்று சொல்லத் துணிகிறீர்களோ, அதுவே உங்கள் அடையாளம். ஏனெனில்,அகம் சிதைந்திருந்தால், புற உலகில் கிடைக்கும் எந்த வெற்றியும் சத்தமில்லாத தோல்விதான். ஆனால் அகம் தெளிவாக இருந்தால், சிறிய வாழ்க்கையுமே உயர்ந்த வாழ்வாக மாறிவிடும்.





அக தெளிவு என்பது எப்போதும் அமைதியாக இருப்பது அல்ல. சில நேரங்களில் அது உங்களை தனிமைப்படுத்தும். சில நேரங்களில் அது உங்களை தவறாக புரிந்துகொள்ளச்செய்யும்.ஆனால் ஒருநாளும் அது உங்களை பொய்யாக வாழ விடாது. Søren Kierkegaard சொன்னது போல, "தன்னை இழந்துவிட்டு உலகை வெல்வது தான் மனிதனின் மிகப் பெரிய துயரம்." இந்தத் துயரமே இன்று பலரின் வாழ்க்கை. வெளியில் அழகான பொருத்தமான முகமூடியும் உள்ளே தெளிவற்ற அடையாளமும் போல இருக்கும் உங்கள் வாழ்க்கையை சீரமைப்பது பெரிய முடிவுகளால் அல்ல. ஆனால் நேர்மையான சிறிய தேர்வுகளால் ஆகும்.

•இன்று நீங்கள் சொல்லும் ஒரு "இல்லை"
•இன்று நீங்கள் நிறுத்தும் ஒரு பொய் முயற்சி
•இன்று நீங்கள் ஒப்புக்கொள்ளும் ஒரு உண்மை

இவையெல்லாம் சேர்ந்து தான் அகத்தை மீண்டும் மையத்துக்கு கொண்டு வருகின்றன.ஒரு நாள், நீங்கள் பின்திரும்பிப் பார்க்கும்போது,"நான் சரியான முடிவுகளை எடுத்தேனா?" என்று கேட்கமாட்டீர்கள்."நான் உண்மையாக வாழ்ந்தேனா?" என்று தான் கேட்பீர்கள்.அந்தக் கேள்விக்கு "ஆம்" என்று பதில் சொல்ல முடிந்தால்,அப்பொழுது நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை பெரியதா சிறியதா என்பது ஒரு விஷயமாக இருக்காது. மாறாக அது முழுமையானதாக இருக்கும்.

**அகம் தெளிந்தால்,**
**புற உலகம் சரியாக அமையத் தொடங்கும்.**



# மனம் ஒரு மாய ஊஞ்சல்

சிவகுமார் ஐதுஷிகா
3ம் வருட உளவியற்த்துறை
(சிறப்பு கற்கை) மாணவி
யாழ். பல்கலைக்கழகம்.

மனமென்பது மனித வாழ்வின் அடிப்படையான சக்தியாகும். மனிதன் என்ன நினைக்கிறான், எப்படி உணர்கிறான், எந்த முடிவை எடுக்கிறான் என்பதனை அனைத்தையும் தீர்மானிப்பது அவனது மனமே. மனித வாழ்க்கையின் வெளிப்புற நிகழ்வுகளை விட, உள்ளுக்குள் நடைபெறும் மன அசைவுகளே அவன் வாழ்க்கையின் திசையை நிர்ணயிக்கின்றன. அதனால் தான் மனத்தைப் புரிந்துகொள்ளாமல் மனித வாழ்க்கையை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. மனம் சில நேரங்களில் நம்மை முன்னே நடத்தும் வழிகாட்டியாக இருக்கும் சில நேரங்களில் அதே மனமே நம்மை குழப்பத்தில் ஆழ்த்தும் தடையாக மாறும். இந்த நிலைமாற்றங்களால் தான் மனம் ஒரு "மாய ஊஞ்சல்" போல செயல்படுகிறது.

ஒரு ஊஞ்சல் எப்போதும் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருக்காது. அது முன்னும் பின்னும் அசையும். அதுபோல மனித மனமும் ஒரே உணர்ச்சி நிலையில் நிலைத்திருக்காது. ஒரு நாள் மகிழ்ச்சியுடன் இருப்பவர், மறுநாள் காரணமே தெரியாமல் சோர்வாக இருக்கலாம். இன்று தைரியமாக முடிவெடுப்பவர், நாளை அதே விஷயத்தில்

தயக்கம் அடையலாம். இந்த மாற்றங்கள் பெரும்பாலும் வெளிப்புற சூழ்நிலைகளால் மட்டும் ஏற்படுவதில்லை. பல சமயங்களில் மனத்தின் உள்ளார்ந்த அசைவுகளே இதற்குக் காரணமாகின்றன. மனிதன் சந்திக்கும் பெரும்பாலான பிரச்சனைகள் மனதில் தொடங்குகின்றன என்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் காணலாம். ஒரே குடும்பத்தில், ஒரே சூழலில் வளர்ந்த இரு மனிதர்கள் வாழ்க்கையை முற்றிலும் வேறுபட்ட முறையில் எதிர்கொள்வதைப் பார்க்கிறோம். ஒருவருக்கு சிக்கல்கள் சவால்களாகத் தோன்றும் மற்றொருவருக்கு அதே சிக்கல்கள் சுமையாகத் தோன்றும். இங்கு சூழ்நிலை ஒன்றே இருந்தாலும், மனம் அதைப் பார்க்கும் விதம் மாறுவதால் வாழ்க்கை அனுபவமும் மாறுகிறது.

ஒரு எளிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஒருவர் வேலை இடத்தில் ஒரு தவறை செய்கிறார். அவரது மனம், "இது ஒரு அனுபவம் இனி இப்படிச் செய்யாமல் கவனமாக இருக்கலாம்" என்று சொன்னால், அந்த தவறு அவரை முன்னே செல்ல உதவும். ஆனால் அதே தவறை மற்றொருவரின் மனம், "நான் பயனற்றவன்", "எனக்கு எந்த வேலைக்கும் தகுதி இல்லை" என்று எடுத்துக்கொண்டால், அது அவரை மனச்சோர்வில் தள்ளிவிடும். இங்கு தவறு ஒன்றே ஆனால் மனம் கொடுக்கும் விளக்கம் மாறுவதால் வாழ்க்கையின் பாதை மாறுகிறது.

ஆய்வுகள் கூறுவது என்னவென்றால், மனித மனம் நிகழ்வுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாது. அது தனது முன் அனுபவங்கள், பயங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அந்த நிகழ்வுகளுக்கு அர்த்தம் கொடுக்கிறது. இதனால் ஒரே சம்பவம் ஒருவருக்கு வேதனையாகவும், மற்றொருவருக்கு சாதாரண அனுபவமாகவும் மாறுகிறது. இதுவே மனத்தின் மாய தன்மையை வெளிப்படுத்துகிறது.

மனத்தின் மாய இயல்பு அதன் நினைவாற்றலிலும் தெளிவாகக் காணப்படுகிறது. மனித மனம் கடந்த நிகழ்வுகளை அப்படியே சேமித்து வைப்பதில்லை. அது சில நினைவுகளை பெரிதாக்கும் சிலவற்றை மெதுவாக மறைத்துவிடும். சில நேரங்களில் கடந்த காலம் உண்மையில் நடந்ததை விட அதிக வேதனையுடன் நினைவில் நிற்கும். சில நேரங்களில் அதே கடந்த காலம் மிக அழகான நினைவாக மனதில் பதியப்படும். இதனால் கடந்த காலம் ஒரு வரலாறாக இல்லாமல், மனம் உருவாக்கும் கதையாக மாறிவிடுகிறது.

ஒரே வீட்டில் வளர்ந்த சகோதரர்கள் கூட தங்கள் குழந்தைப் பருவத்தை வெவ்வேறு விதமாக நினைவுகூர்வதை நாம் காண்கிறோம். ஒருவருக்கு அது மகிழ்ச்சியான காலமாகத் தோன்றும் மற்றொருவருக்கு அது கடினமான காலமாக நினைவில் இருக்கும். இதற்கு காரணம் நிகழ்வுகள் அல்ல் அவற்றை மனம் சேமித்த விதமே காரணமாகும்.

மனத்தின் ஊஞ்சல் நமது உணர்ச்சிகளையும் ஆழமாகப் பாதிக்கிறது. மகிழ்ச்சி, கவலை, கோபம், பயம், ஆசை, பொறாமை போன்ற உணர்ச்சிகள் அனைத்தும் மனத்தின் அசைவுகளின் விளைவாக உருவாகின்றன. சில நேரங்களில் சிறிய விஷ யங்களுக்கே நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அதேபோல், மிகச் சிறிய வி'யங்களுக்கே மனம் உடைந்து போகும் நிலையும் ஏற்படுகிறது. இது நிகழ்வுகளின் அளவைக் காட்டிலும், மனம் அவற்றை எவ்வாறு எடுத்துக்கொள்கிறது என்பதையே காட்டுகிறது. மனித உறவுகளிலும் மனத்தின் மாய ஊஞ்சல் முக்கிய பங்கு வகிக்கிறது. குடும்பம், நண்பர்கள், உறவுகள் ஆகிய அனைத்தும் மனத்தின் அடிப்படையில் உருவாகின்றன. சில நேரங்களில் மனத்தில் தோன்றும் சந்தேகம், கோபம், எதிர்பார்ப்பு ஆகியவை உறவுகளைப் பாதிக்கின்றன. உண்மையில் பேசித் தீர்க்கக்கூடிய சிறிய பிரச்சனைகள் கூட, மனத்தில் பெரிதாக வளர்ந்து பெரிய இடைவெளிகளை உருவாக்குகின்றன. பல உறவுகள் வெளிப்புற காரணங்களால் அல்ல் மனத்தில் உருவாகும் தவறான எண்ணங்களால் உடைந்து போகின்றன.

இன்றைய வேகமான வாழ்க்கை முறையில் மனத்தின் ஊஞ்சல் மேலும் வேகமாக அசைகிறது. வேலை அழுத்தம், பொருளாதார சிக்கல்கள், பிறருடன் ஒப்பிடும் பழக்கம், எதிர்காலப் பயம் ஆகியவை மனத்திற்கு ஓய்வில்லாத நிலையை உருவாக்குகின்றன. இதனால் மனிதன் வெளியில் சிரித்துக் கொண்டிருந்தாலும், உள்ளுக்குள் அமைதியற்ற நிலையில் வாழ்கிறான். ஆய்வுகள் கூறுவதாவது, தொடர்ந்து மன அழுத்தத்தில் இருப்பவர்கள் சிறிய விஷயங்களுக்கே அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதாகும்.

ஆனால் மனம் முழுவதும் மாயம் மட்டுமல்ல. அதுவே மனிதனுக்கு அன்பையும், கருணையையும், படைப்பாற்றலையும் அளிக்கிறது. ஒரு தாயின் பாசம், ஒரு நண்பனின் அக்கறை, பிறர் துன்பத்தைப் பார்த்து மனம் நெகிழ்வது மனத்தின் அழகான முகங்கள். மனிதனை மனிதனாக வைத்திருப்பதே மனத்தின் இந்த நல்ல பண்புகள்தான்.



மனத்தை அடக்க வேண்டிய ஒன்றாக அல்ல புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாக பார்க்கும்போது வாழ்க்கை எளிதாகிறது. மனம் சொல்லும் ஒவ்வொரு எண்ணமும் உண்மை அல்ல என்பதை உணர்வது மிகவும் முக்கியம். மனம் சில நேரங்களில் பயத்தால், சில நேரங்களில் பழைய அனுபவங்களால், சில நேரங்களில் தேவையற்ற கற்பனைகளால் எண்ணங்களை உருவாக்குகிறது. அவற்றை உண்மையென நம்பாமல், அவற்றை கவனித்துப் பார்க்கும் பழக்கம் வந்தால் மனத்தின் பிடியிலிருந்து விடுபட முடியும்.

மனத்தின் ஊஞ்சலை சமநிலைப்படுத்த சில எளிய வழிகள் உள்ளன. தினமும் சிறிது நேரம் அமைதியாக உட்கார்ந்து, தன் எண்ணங்களை கவனிப்பது உதவியாக இருக்கும். தேவையற்ற ஒப்பீடுகளை தவிர்ப்பது மனத்திற்கு நிம்மதியை தரும். நம்பகமான ஒருவரிடம் மனதைப் பகிர்வதும் மனச்சுமையை குறைக்கும். இயற்கையுடன் நேரம் செலவிடுதல், உடலை இயக்கும் பழக்கங்கள், போதிய ஓய்வு ஆகியவை மனத்தின் சுழற்சியை மென்மையாக்குகின்றன.

மனம் ஒரு மாய ஊஞ்சல் என்பதை உணர்ந்தால், நாம் மனத்தின் அடிமைகளாக இருப்பதைத் தவிர்க்க முடியும். மனம் நம்மை வழிநடத்த வேண்டுமே தவிர, நம்மை ஆள வேண்டாம். மனத்தை நமக்குச் சாதகமாக பயன்படுத்த கற்றுக்கொண்டால், வாழ்க்கையின் சிக்கல்களையும் சவால்களையும் தைரியமாக எதிர்கொள்ள முடியும்.

முடிவாக, மனம் உண்மையிலேயே ஒரு மாய ஊஞ்சல் தான். அது எப்போதும் அசையும் சில நேரங்களில் நம்மை உயர்த்தும், சில நேரங்களில் சோதிக்கும். ஆனால் அந்த ஊஞ்சலை எந்த திசையில் இயக்குவது என்பது நமது விழிப்புணர்ச்சியில்தான் உள்ளது. மனத்தைப் புரிந்து, அதனுடன் நட்பு கொள்ளும் மனிதனே வாழ்க்கையை உண்மையாகப் புரிந்தவன். மனத்தின் ஊஞ்சலை சமநிலையுடன் இயக்கக் கற்றுக்கொள்வதே அமைதியான, அர்த்தமுள்ள வாழ்க்கையின் அடிப்படை.



# சிகரம் தொடும் சிங்கப்பெண்கள்.

## தடைகளைத் தகர்த்த சாதனையின் வரலாறு

முரளிதரன் ஷாம்பவி
உளவியல் துறை
இரண்டாம் வருடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

“பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இந்தத் திருநாட்டில் மண்ணடிமை தீருவது முயற்கொம்பே” என்று பாடினார் பாரதிதாசன். ஆனால் இன்று, அந்த நிலை மாறிக்கொண்டிருக்கிறது. அடுப்படியில் முடங்கிக் கிடந்த பெண்கள், இன்று ஆகாயத்தில் விமானம் ஓட்டுவது முதல் விண்வெளியைத் தொடுவது வரை அனைத்துத் துறைகளிலும் தங்கள் முத்திரையைப் பதித்து வருகிறார்கள். ஒரு தேசத்தின் முன்னேற்றம் என்பது அந்த நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அமையும் என்பதற்கு இன்றைய பெண்களின் சாதனைகளே சாட்சி.

1. கல்வி, மாற்றத்தின் முதல் படி

எந்தவொரு சாதனைக்கும் அடிப்படை கல்விதான். ஒரு ஆணுக்குக் கல்வி புகட்டினால் அது அந்த ஒருவருக்கு மட்டுமே சேரும் ஆனால், ஒரு பெண்ணுக்குக் கல்வி புகட்டினால் அது அந்தத் தலைமுறைக்கே சேரும் என்ற பழமொழி இன்று உண்மையாகியுள்ளது. சாவித்திரிபாய் புலே போன்ற முன்னோடிகள் விதைத்த விதையால்தான், இன்று கல்வி நிலையங்களில் ஆண்களுக்கு நிகராகவும், பல இடங்களில்

ஆண்களை விட அதிகமாகவும் பெண்கள் சாதித்து வருகின்றனர். மருத்துவத் துறை, பொறியியல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பெண்களின் பங்களிப்பு வியக்க வைக்கிறது.

2. அரசியல் மற்றும் தலைமைப் பண்பு

ஆளுமைத் திறன் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற மாயையைத் தகர்த்தெறிந்தவர்கள் பெண்கள். இந்திரா காந்தி முதல் ஜெயலலிதா வரை, மார்கரெட் தாட்சர் முதல் கமலா ஹாரிஸ் வரை உலக அரசியலில் பெண்கள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். உள்ளாட்சி அமைப்புகள் முதல் நாட்டின் உயரிய பதவிகள் வரை பெண்கள் இன்று திறம்படச் செயல்படுகின்றனர். இவர்களின் நிர்வாகத் திறனும், இக்கட்டான சூழலில் எடுக்கும் முடிவுகளும் அவர்களின் தலைமைப் பண்பிற்குச் சான்றாகும்.

3. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (STEM)

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் இந்தியப் பெண்களின் சாதனை உலகையே உற்றுநோக்கச் செய்துள்ளது. 'மங்கள்யான்' விண்கலத் திட்டத்தில் பணியாற்றிய பெண் விஞ்ஞானிகளின் பங்களிப்பு, இந்தியாவின் விண்வெளி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் போன்றோர் விண்வெளி வீரர்களாகச் சாதித்திருக்கிறார்கள் என்றால், டெஸ்ஸி தாமஸ் போன்றோர் 'இந்தியாவின் ஏவுகணைப் பெண்மணி' (Missile Woman of India) என்று அழைக்கப்படும் அளவிற்குப் பாதுகாப்புத் துறையில் சாதித்துள்ளனர்.

4. விளையாட்டுத் துறை: களத்தில் ஒரு புரட்சி

விளையாட்டுத் துறையில் பெண்கள் படைத்து வரும் சாதனைகள் இளைய தலைமுறைக்குப் பெரும் ஊக்கமளிப்பவை.

- பி.டி. உஷா முதல் பி.வி. சிந்து வரை,
- கிரிக்கெட்டில் மிதாலி ராஜ்,
- குத்துச்சண்டையில் மேரி கோம்,
- மல்யுத்தத்தில் போகட் சகோதரிகள எனப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

வறுமையும் சமூகத் தடைகளும் தடையாக இருந்தாலும், அவை எவற்றையும் பொருட்படுத்தாமல் ஒலிம்பிக் பதக்கங்களை வென்று இந்தியாவிற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

5. தொழில்முனைவோர் மற்றும் பொருளாதாரம்

இன்றைய பெண்கள் வேலையைத் தேடுபவர்களாக மட்டுமல்லாமல், வேலை வழங்கும் ‘தொழில்முனைவோராக’ (Entrepreneurs) உருவெடுத்துள்ளனர். நைக்கா (Nykaa) நிறுவனத்தின் பல்குனி நாயர் முதல் பயோகான் (Biocon) நிறுவனத்தின் கிரண் மஜும்தார் ஷா வரை, பொருளாதாரத் துறையில் பெண்களின் பலத்தை உலகிற்கு நிரூபித்துள்ளனர். கிராமப்புறங்களில் கூட ‘சுயஉதவிக் குழுக்கள்’ மூலம் பெண்கள் சிறு தொழில்களைத் தொடங்கி, குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

6. சவால்களும் தற்காலத் தடைகளும்

இவ்வளவு சாதனைகளுக்கு மத்தியிலும், பெண்கள் சில சவால்களைச் சந்திக்கத்தான் செய்கிறார்கள். பணியிடங்களில் பாதுகாப்பு, ஊதியப் பாகுபாடு, குடும்பப் பொறுப்புகளையும் பணியையும் சமநிலைப்படுத்துவதில் ஏற்படும் சிரமங்கள் (Work-life balance) போன்றவை இன்றும் தொடர்கின்றன. இருப்பினும், மன உறுதியால் அவர்கள் இந்தத் தடைகளைத் தகர்த்து முன்னேறி வருகின்றனர்.

பெண்கள் இன்று “அபலைகள்” அல்ல, அவர்கள் “சபலைகள்” ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவு ஓங்கி இவ்வையகம் தழைக்கும் என்ற பாரதியின் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் இன்றைய பெண்சமூகம் முன்னேறி வருகிறது. பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவது என்பது அவர்களைப் பாராட்டுவது மட்டுமல்ல, மாறாக அவர்களுக்கு இன்னும் அதிகமான வாய்ப்புகளையும் சம உரிமையையும் வழங்குவதாகும். ஒரு சமுதாயம் முழுமையான வளர்ச்சியை அடைய வேண்டுமானால், அங்கு பெண்களின் முன்னேற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்க வேண்டும்.




அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு




# தமிழரின் பண்பாட்டையும் அடையாளத்தையும் தாங்கும் தமிழ்மொழி

நடராசா கோபிராம்
யாழ்ப்பாணம்
இலங்கை

தமிழ்மொழி என்பது ஒரு மொழி மட்டுமல்ல அது தமிழரின் வாழ்வியல் வடிவம், ஓர் உயிர்துடிப்பு, தலைமுறைகளை இணைக்கும் பாலம், மரபை பாதுகாக்கும் வேர்வளையம். உலகில் தொன்மை வாய்ந்த மொழிகள் பல இருந்தாலும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ச்சியாகப் பேசப்பட்டு, இலக்கிய, கலாச்சார, தத்துவ, அரசியல், சமூக துறைகளில் தடம் பதித்து வந்த ஒரு மொழி என்றால் அது தமிழ் மட்டுமே. சங்ககால இலக்கியங்கள் முதல் நவீன கலை, அறிவியல், தொழில்நுட்பம் வரை, தமிழ்மொழி மனித வாழ்வின் அனைத்து உச்சங்களையும் கீழ்மைகளையும் பதிவு செய்தும், தாங்கியும், மனிதகுலத்திற்கு பரிசளித்தும் வருகிறது. தமிழரின் அடையாளம் என்ற சொல் பேசப்படும் பொழுது முதலில் மனதில் தோன்றுவது அவர்களின் மொழியே காரணம், தமிழில் மறைந்திருக்கும் வரலாறு, தத்துவம், வாழ்வியல் நெறிகள், உணர்ச்சிகள் ஆகியவை அவர்களின் பண்பாட்டின் பிரதிபலிப்புகளாக விளங்குகின்றன.

தமிழின் எழுத்தமைப்பு உலக மொழிகளில் தனித்துவமான அறிவியல் வளம் கொண்டது. உயிரெழுத்துகள் உயிரினை குறிக்கும் விதமும், மெய்எழுத்துகள் வலுவையும் அடையாளப்படுத்தும் விதமும் தமிழின் எழுத்து வடிவமைப்பு இயற்கையின் ஒலியியல் ஒழுங்குகளைப் பின்பற்றுகிறது.

ஒவ்வொரு எழுத்திலும் இசை உள்ளது ஒவ்வொரு சொல்லிலும் உணர்ச்சி உள்ளது ஒவ்வொரு வரியிலும் வரலாறு உள்ளது. ‘அ’ என்ற எழுத்திலிருந்து அதன் அங்குலப்படிகள் அனைத்தும், தமிழ் மொழியில் ஒலி, உச்சரிப்பு, பொருள், உணர்வு ஆகியவற்றை சமச்சீராக இணைத்து ஒரு ஒற்றுமையான மொழிவரலாற்றை உருவாக்குகின்றன. இதுவே தமிழை அழகாக்குவதோடு மட்டுமல்ல, அறிவியல் ரீதியாகவும் வலிமை வாய்ந்த மொழியாக மாற்றுகிறது.


தமிழர் பண்பாடு என்பது பல ஆயிர ஆண்டுகளாக உருவெடுத்து வந்த கலாச்சாரங்களின் சங்கமம். இந்த பண்பாட்டின் ஒவ்வொரு கூறும் தமிழ்மொழி வழியே தலைமுறைகள் தாண்டி பரவியது. தமிழ் மக்கள் வாழ்ந்த பண்டைய சங்க காலத்தில் இயற்கை நெருக்கடி, சமூக ஒழுக்கம், மனித உறவுகள், காதல், வீரியம், சமூகநலம் போன்றவை அனைத்தும் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு போன்றவை தமிழரின் மனசாட்சியையும், வாழ்க்கை முறையையும், பண்பாட்டு தத்துவத்தையும் அந்தந்த காலத்தில் எப்படித் தாங்கியிருக்கின்றன என்பதைச் சாட்சியமாக காட்டுகின்றன. அந்தக் காலத்தில் தமிழின் தூய்மையான சொற்கள் மனித உணர்வுகளை எவ்வளவு நுணுக்கமாகப் பிரதிபலித்தனவோ, இன்று கூட அதே நுட்பம், அதே கண்ணியம், அதே அழகு தமிழ்மொழியில் திகழ்கிறது.

தமிழரின் அடையாளம் என்பது அவர் பேசும் மொழியுடனும், அவர் பின்பற்றும் பண்பாட்டுடனும், அவர் பேணும் பாரம்பரியத்துடனும் பின்னிப் பிணைந்த ஒன்று. கலை, இசை, நடனம், இலக்கியம், கட்டிடக்கலை, திருவிழாக்கள், மரபுகள் அனைத்தும் தமிழின் வழியே தமிழரின் உள்ளத்தில் பதிந்து நிற்கின்றன. கோயில் கட்டிடக்கலையில் காணப்படும் கலைப்பண்பும், ஓலைச்சுவடிகளில் பாதுகாக்கப்பட்ட மருத்துவமுறை அறிவும், சங்க இலக்கியத்தில் பேசப்படும் தனிப்பட்ட சுற்றுச்சூழல் மரபுகளும்டதமிழ்மொழியால் தாங்கப்பட்ட பண்பாட்டு பகடங்கள். மழலையின் முதல் சொல் ‘அம்மா’ என்று ஒலிக்கும் முதல் நொடியிலிருந்து இறுதி வரை மனிதன் அனுபவிக்கும் உணர்ச்சிகள் அனைத்தையும் தாய்மொழி தான் வடிவமைக்கிறது. அதேபோல், தமிழர் உலகின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவரின் உள்ளத்தில் உள்ள தமிழ் ஒசை அவரை எளிதில் அடையாளப்படுத்தித் தருகிறது. ஏனெனில் தமிழ் என்பது தமிழரின் உண்மை முகம்.

பண்டைய காலங்களில் சமூக ஒழுக்கம், மனிதநேயம், விருந்தோம்பல், அன்பு, பாசம், வீரம், பரிவு ஆகியவற்றை தமிழ்மொழி மிக நுட்பமாக எடுத்துரைத்தது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வரி உலக மனிதருக்கும் தாய்மொழி கூறும் ஒற்றுமை உணர்வின் மிகப் பெரிய எடுத்துக்காட்டு. மனிதன் எங்கிருந்தாலும் எல்லோரும் சகோதரர்களே என்ற வாழ்வியல் தத்துவம் தமிழில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகிறது. இது தமிழ் பண்பாட்டின் மேன்மையும், மனிதநேயத்தின் உச்சமும் என்பதை உணர்த்துகிறது. அதுபோல், "அன்பே சிவம்" என்ற கருத்து காதல் என்ற ஒன்றை மட்டும் குறிக்காமல், அனைத்து மனிதர்களிடமும் காணப்படும் பரிவு, உதவி, அருள், பக்தி போன்றவற்றின் அடிப்படையான சக்தியை விளக்குகிறது. இதெல்லாம் மொழியின் அழகு மட்டுமல்ல, தமிழரின் வாழ்க்கையில் மொழி வகிக்கும் ஆழ்ந்த இடத்தைக் காட்டும் அடையாளங்கள்.


தமிழ்மொழி அறிவியலிலும், மருத்துவத்திலும், வானியல், கணிதம், மரபியல் அறிவு, நெறிமுறைகள் உள்ளிட்ட பல துறைகளில் பங்களித்து வந்துள்ளது. சங்க இலக்கியங்களில் காணப்படும் தாவரவியல், விலங்கியல், கடலியல் அறிவு இன்று கூட ஆச்சரியப்பட வைக்கிறது. பெரும்பாலும் தமிழ் மக்கள் இயற்கை நடத்தை, காலநிலை மாறும் முறைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் தமிழில் இருந்த பழைய அறிவை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டனர். இதனால், தமிழரின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்ததாய், சுற்றுச்சூழலுக்குக் காப்புக்கவசமாக அமைந்தது.

தமிழ்மொழி மரபுவழிப் பண்பாட்டையும் நவீன உலகையும் இணைக்கும் பொற்கொடி. இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகிலும் தமிழ் தனது அடையாளத்தை இழக்காமல், வலிமையாகத் திகழ்கிறது. இணையம், தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் கூட தமிழ் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மின்னூல்கள், இணையக்கல்வி, சமூக ஊடகங்களில் தமிழ் எழுத்துகளின் பயன்பாடு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இது தமிழ் மொழியின் வாழ்வு மட்டும் அல்ல, அதன் வளர்ச்சியையும் காட்டுகிறது. ஒரு மொழி தனது தனித்துவத்தையும் வேர்களையும் காப்பாற்றிக் கொண்டாலேயே உலக முன்னேற்றத்தில் கலந்து கொள்ள முடியும் என்பதற்கான மிகப் பெரிய எடுத்துக்காட்டு தமிழே.



தமிழர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அவர்கள் மொழியே அவர்கள் அடையாளத்தைத் தாங்கி நிற்கிறது. ஒரு தமிழ் சொல் கூட ஒரு தமிழரின் உள்ளத்தில் வேர் பிடிக்கக்கூடிய வல்லமை கொண்டது. அன்னையின் தாலாட்டு, காதலனின் பரிவு, நண்பனின் ஊக்கம், வீரனின் உறுதி, தந்தையின் கட்டளை என எதிலும் தமிழ் மறைந்திருக்கிறது. இதனைத் தான் ‘மொழி’ என்ற சொல்லால் மட்டும் விவரிக்க முடியாது அது ஒரு உயிர்மொழி, ஒரு உணர்ச்சி, ஒரு வரலாறு, ஒரு பண்பாடு, ஒரு வாழ்க்கை.

இதனால் தான் தமிழ்மொழி தமிழரின் அடையாளம் மட்டுமல்ல அது தமிழரின் சுவாசம் இந்த சுவாசம் தலைமுறைகளைத் தாண்டி வரும் மரபையும், தமிழரின் மனிதநேயத்தையும், காதலையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்கிறது. தமிழ்மொழி வாழும் வரை தமிழர் வாழ்வார் தமிழர் வாழும் வரை தமிழ்மொழி நிலைக்கும். தமிழ் என்பது சொற்களின் சேகரமாக அல்ல அது தமிழரின் இதய துடிப்பாகவும், பல நூற்றாண்டுகளாக வளர்ந்த பண்பாட்டின் உயிராகவும் விளங்கும் தாய்மொழி.



# தமிழரின் பண்பாட்டையும் அடையாளத்தையும் தாங்கும் தமிழ்மொழி – கவிதை

தமிழின் எழுத்தெலாம் உயிர்த்துளி பொங்கும் மழையாக,
தாயின் தாலாட்டில் பிறந்த நெஞ்சத் துடிப்பாக்
வேரோடு வளர்ந்த பழங்காலக் கனவுகளின் நிழலாக,
வெண்பா ஓசையில் ஓடும் நம் நெஞ்சின் இசையாக.

கல்லறைமேல் எழுதின வார்த்தையையும் உயிர்ப்பிக்கும் மொழி,
காதல் முதல் வீரக்காவியம் வரை தாங்கும் கேள்விமொழி
காற்சிலம்பு சிணுங்கும் ஓசையிலும் தமிழ் தன் மணம்,
காலத்தைக் கடக்கும் காவியமாக காத்திருக்கிறது நம் மனம்.

முதுமையான சங்கத்தின் சான்றுகள் சொல்லும் மரபாக,
மூதாதையர் வாழ்வின் ஒவ்வொரு நெறியையும் பொருளாக்
அன்பின் அணுவிலும் எழுதிய தத்துவமாக,
அடியெடுத்து வைக்கும் பிள்ளையின் முதல் சொல்லாக.

உலகம் முழுதும் வாழும் தமிழரின் அடையாளம்,
உயிரோடு நின்று பேசும் மொழியின் நெஞ்சழகும் நிழலும்
கடலோடும், காற்றோடும் பயணம் செய்த பண்பாட்டின் பூமரம்,
காலம் கரைத்தாலும் வாடாத நறுமணத்தால் நிறைந்த மரபின் சிவந்த கருமரம்.
நாடெங்கும் நம் சொந்தம் என உறவுகளை ஏந்தும் மொழி,
நாட்டை கடந்தும் நெஞ்சை தழுவும் இனிய எழுத்தொலி
எத்தனை மாற்றங்கள் வந்தாலும் வாழ்வில் நிலைபெறும்,
எங்கள் அடையாளத்தை என்றும் காப்பாற்றி நிற்கும்.

தமிழே! நீ இல்லாமல் தமிழன் என்பதே இல்லை,
நீயே நம் வேரும், வாழ்வும், உயிரும், அடையாளம்
உன்னைப் பேசும் காலம் முடியும் வரை நிற்கும் நம் பெருமை,
உலகம் முழுதும் ஒலிக்கும் தமிழின்மீது விளங்கும் மகிமை.

நடராசா கோபிராம்
யாழ்ப்பாணம்
இலங்கை



# நரியும் இறைச்சித் துண்டும்

ஒரு நரி, அது பல நாள் பட்டினி. பல இடங்களிலே உணவுக்காக அலைந்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் பெரியதொரு இறைச்சித்துண்டம் கிடைத்தது. அதை வாயிலே கௌவிக்கொண்டு நரி தன் இருப்பிடம் நோக்கி விரைந்தது. வழியிலே நீர் பாய்ந்து கொண்டிருக்கும் ஒரு வாய்க்கால். அதைக் கடந்து செல்லுகையில், மீன்கள் தண்ணீரில் குறுக்கும் நெடுக்குமாக ஓடி மிளிர்ந்தன. நல்ல வரிகளையுடைய வரால் மீன்கள் நீலநிறமாய்ப் பளபளவென்று மின்னின. தண்ணீர் வேகமாய்ச் சுருட்டி இழுத்தது. நரிக்கு நிலைக்க முடியாத ஆழம். ஆயினும் அது நீந்திக் கொண்டே சென்றது. வரால் மீன்கள் அதன் வாலிலும் காலிலும் பட்டு துடித்துத் துள்ளின. நீரை அடித்துத் தள்ளின. மீனைக் கண்டதும் நரிக்கு வாயிலே நீர் ஊறியது.

மீன்சுவையோ தேன்சுவையோ அல்லவா? அதோ ஒரு வரால் நீரை எதிர்த்து எவ்வளவு ஒய்யாரமாய் நிற்கிறது. ஒரே பாய்ச்சல். வாயைத் திறந்து கொண்டு நரி பாய்ந்தது. மீன் நழுவிவிட்டது. வாயிலிருந்து வழுக்கிவிழுந்த இறைச்சிக் கண்டமும் நீரிலே முழுகிவிட்டது. ஏமாந்து போன நரி வெறும் வாயைக் குதட்டிப் பற்களை மென்றது. மீன் மீதிருந்த ஆசை தன்வாயிலிருந்த இறைச்சித் துண்டையும் மறக்கச் செய்தது. மீனைக் கண்டதும் ஊனை மறந்தது. பேராசையே பெருநட்டமானது.

வாய்க்கு எட்டியது வயிற்றுக்கு எட்டவில்லை. இந்த நரிக்கு ஏன் இவ்வளவு அறிவு இல்லாமற் போய்விட்டது? என்று நாம் நரியைப் பார்த்துச் சிரிக்கிறோம். ஆனால் நம்முடைய அறிவுதான் எந்த நிலையிலிருக்கிறது? பெறுதற்கரிய மனிதப் பிறவியை எடுத்தோம். அதன் குறிக்கோளைத் தெரிந்து கொள்ளாது கெடுத்தோம். சிவஞானம் பெறுதற்கேற்ற வாய்ப்புகளுடன் பிறந்தோம். அவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்த மறந்தோம். சிவகதி அடைவதற்கானவற்றை முயலாமல் அவகதி அடைவதற்கான அல்லல்களையெல்லாம் விரும்பித் தேடிக் கொண்டோம்.

பரம சுகமாவது பொறுப்பரிய துயரமாய் அழுத்தக் கண்டோம். மனதைச் செம்மைப்படுத்தி அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்புலன்களாகிய யானைகளை அடக்கும் வலியை இழந்தோம். அவற்றின் கால்களில் நாம் கட்டுண்டு, அவை நாலாபக்கமும் இழுக்க நாம் நடுவிற் கிடந்து நலிவுறுகிறோம். அருளிற் திளைக்கப் பிறந்த நாம் மருளிற் புதைந்து மதிகுலைகிறோம். இவ்வுலக வாழ்க்கையே நீரோடை. இவ்வுலகிடை நிலைத்திராத சிற்றின்பங்களே வரால் மீன்கள். உயிர்தான் நரி. நல்லறிவைக் கொண்டு பேரின்பம் பெறுவதற்கேதுவாகிய இப்பிறவியே இறைச்சித்துண்டு.

இந்த முறையே பார்க்கும்பொழுது, நாம் நரியை விடவும் மிகமிகக் கேடுகெட்ட நிலையில் அல்லவா இருக்கிறோம்? நரியைப் பார்த்துச் சிரித்தோமே! இப்பொழுது நம்மையே பார்த்து அழுகிறோம் அல்லவா! நமது சிந்தையிலே எழுகின்ற மயக்கத்தை அறுப்பதற்குச் சிவபெருமான் திருவருள் வேண்டும். அவனுக்கு நாம் அன்பு செலுத்தி அவன் அருள் பெற்று ஞானம் அடைவதை விட்டு உலக காரியங்களிலே நமது புத்தியைச் செலுத்திக் காலத்தைக் கழிக்கிறோம். கால பாசத்திற்காளாகிக் கழிக்கிறோம். உறுதியளிக்கும் பொருள்களை இறுகத் தழுவித் திகைக்கிறோம். நல்லறிவையும் கழுவிக் கரைக்கிறோம். உலக பாசம் என்னும் வரால் மீன்கள் நம்மைச் சுற்றி வளைத்து மயக்கி மருட்டி மறைந்து விடுகின்றன. காலம் என்னும் நீரோடை, இறைச்சி என்னும் நமது மானிடப் பிறப்பினால் வந்த காயத்தை நம்மைவிட்டுக் கழற்றி இழுத்துக் கழிந்து விடுகிறது. “வாய்ந்தது நந்தமக்கீதோர் பிறவி! மதித்திடுமின்!“ என்ற அறிவுரையை நாம் மதியாது வாழ்ந்ததால் மயங்கித் தவிக்கிறோம்.

வரால் மீனுக்கு ஆசைவையாது நரி ஓடையைக் கடந்திருந்தால், இறைச்சியைக் கொண்டு தன் பசியை ஆற்றியிருக்கும். அதுபோல் உலக மயக்கத்திலே நமது மனதைச் சிக்கவிடாது சிவன் திருவருளே வேண்டிச் செம்மையுள் நிற்போமாகில், நமது ஆன்ம வேட்கையாகிய பசி தீர்ந்து, என்றும் அழியாத வீட்டின்ப வாழ்வினை நாம் எளிதில் அடையலாம். இல்லாவிடில் பூத்தாடும் பொய்கையிதுவேயெனக் கருதிப் பேய்த்தேர் முகக்குறும்பேதையராகிப் பேதுறுவது திண்ணம். இதை, இந்த நரியின் கதை காட்டுகிறது. பேதை நரியே ஒரு மேதைக் குருவாகி நமக்கு நல்ல பாடம் கற்பிக்கிறது. இதை அப்பர் அடிகள் சுட்டிக் காட்டுகிறார்

**நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தொத்து**
**தெரிவரால் மால்கொள் சிந்தை தீர்ப்பதோர் சிந்தை செய்வார்**
**வரிவரா லுகளும் தெண்ணீர்க் கழனிசூழ் பழன வேலி**
**அரிவரால் வயல்கள் சூழ்ந்த வதிகை வீரட்ட னாரே**





# 78-ல் இலங்கை: முதுமையற்ற முதிர்ச்சி! தேசத்தின் நரைக்குள் மின்னும் ஞானம்.

எழுபத் தெட்டு ஆண்டுகள்…...
இது காலண்டர் கிழித்த வெறும் காகிதக் குப்பையல்ல,
ஒரு தேசம் தன் முதுகெலும்பைக் கண்டறிந்த
மூச்சடக்கிய நெடிய பயணம்!
அன்று,
வெள்ளையன் வெளியேறியபோது
அவன் விட்டுச் சென்றது வெறும் அதிகாரம்!
ஆனால்,
நமது இரத்த அணுக்களில் ஊறியிருந்ததோ
அந்நிய மோகம் எனும் அடிமைச் சிலந்தி!
எழுபத் தெட்டு ஆண்டுகளில்..

அந்தச் சிலந்தி வலைகளைச்
சிந்தனையால் அறுத்து எறிந்தோம்!
தாழ்வு மனப்பான்மை எனும் மன நோயைச்
சுயமரியாதை எனும் அக்கினியில் சுட்டெரித்தோம்!
காயங்கள் இல்லாத சரித்திரம் கிடையாது,
வடுக்கள் இல்லாத முதிர்ச்சி கிடையாது!
நாம் கண்ட போர்களும்..




பசிப் போர்க்களங்களும்..
எம்மைச் சிதைக்க வந்த உள வடுக்கள் அல்ல,
எம்மைச் செதுக்க வந்த ஞான உளிகள்!
நெருக்கடி என்பது நெருப்புதான் - அதில்
இலங்கை எனும் தங்கம் இற்றுப் போகவில்லை..
மாறாக, மீண்டெழும் திறன் எனும்
பக்குவத்தில் மின்னிப் போகிறது!
இன்று,

இலங்கை என்பது வெறும் நிலப்படமல்ல..
அது 78 வயதான வடுகளால் செதுக்கப்பட்ட வைரத்தீவு!!!!
பிரிவினைகளை விழுங்கி ஒருமைப்பாட்டை பெற்றெடுத்த தாய்!!
உணர்ச்சிகளின் கொதிப்பை விட
அறிவின் தர்க்கத்தை நேசிக்கும் ஒரு புதிய ஆளுமை!
முதுமையின் நரையில் - இங்கு
முற்போக்குச் சிந்தனை மின்னுகிறது!

சுதந்திரம் என்பது வெறும் கொடியேற்றமல்ல..
சக மனிதனின் கண்ணீரைத் துடைக்கும்
உள்ளத்தின் விடுதலையே - உண்மையான விடுதலை!
இளமை இன்னும் தீரவில்லை..
ஏனெனில் -
மாற்றத்தை ஏற்கும் தேசத்திற்கு
மரணமே கிடையாது!

முரளிதரன் ஷாம்பவி
உளவியல் துறை
இரண்டாம் வருடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



# வீழ்ச்சிப் பாதையில் பயணிக்கிறதா அவுஸ்ரேலியா கிரிக்கெட் அணி

2026-ஆம் ஆண்டு நடைபெற்று வரும் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில், கிரிக்கெட் உலகின் ஜாம்பவானாகக் கருதப்படும் ஆஸ்திரேலிய அணி சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேற முடியாமல் முதல் சுற்றிலேயே வெளியேறி இருப்பது விளையாட்டு உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் ஒரு பகுதியாக, பல்லேகலேயில் ஜிம்பாப்வே மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையே நடைபெறவிருந்த மிக முக்கியமான லீக் போட்டி மழையினால் ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. மோசமான வானிலை காரணமாக நடுவர்கள் போட்டியை ரத்து செய்ததோடு, இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளியைப் பகிர்ந்து அளித்தனர். இந்த ஒரு புள்ளியின் உதவியுடன் ஜிம்பாப்வே அணி புள்ளிப்பட்டியலில் மொத்தம் ஐந்து புள்ளிகளைப் பெற்று, தனது பிரிவில் இருந்து அடுத்த சுற்றுக்குச் செல்வதை அதிகாரப்பூர்வமாக உறுதி செய்தது.

இந்தத் தொடரில் ஜிம்பாப்வே அணியின் எழுச்சி வியக்கத்தக்கதாக அமைந்தது குறிப்பாக, வலுவான அவுஸ்ரேலியா அணிக்கு எதிரான போட்டியில் அவர்கள் ஈட்டிய வெற்றி, அந்த அணியின் தன்னம்பிக்கையை அதிகரித்ததோடு ஆஸ்திரேலியாவிற்குப் பெரும் நெருக்கடியையும் கொடுத்தது. அதோடு இலங்கை அணியையும் அதன் சொந்த மண்ணில் வைத்தே வென்று காட்டியது சிம்பாப்வே அணி. மறுபுறம், ஆஸ்திரேலிய அணி தனது கடைசி லீக் போட்டியில் ஓமன் அணியை எதிர்கொண்டு ஒரு விரைவான வெற்றியைப் பதிவு செய்தது. இருப்பினும், அந்தப் போட்டியில் அவர்கள் மிகப்பெரிய

வெற்றியைப் பெற்றிருந்தாலும், மொத்தமாக நான்கு புள்ளிகளை மட்டுமே எட்ட முடிந்தது. ஜிம்பாப்வே ஏழு புள்ளிகளைப் பெற்றுவிட்டதால், ஆஸ்திரேலியாவால் இனி அவர்களைத் முந்த முடியாது என்ற நிலை உருவானது. இதன் விளைவாக, ஐசிசி தரவரிசையில் உயரிய இடத்தில் இருந்தும், முன்னாள் சாம்பியன் என்ற அந்தஸ்துடனும் களமிறங்கிய ஆஸ்திரேலியா, லீக் சுற்றோடு தொடரை விட்டு வெளியேறுவது உறுதியானது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றில் இது ஒரு கருப்பு அத்தியாயமாகக் கருதப்படுகிறது. இதற்கு முன்பு 2009-ஆம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக்கோப்பையில் ஆஸ்திரேலிய அணி இதுபோன்று லீக் சுற்றோடு வெளியேறியிருந்தது. அதன்பிறகு சுமார் 17 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு பெரிய ஐசிசி தொடரில் இவ்வளவு சீக்கிரம் அந்த அணி வெளியேறுவது இதுவே முதல் முறையாகும். இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவின் தோல்விக்கு அந்த அணியின் முந்தைய மோசமான செயல்பாடுகளே அவர்களை இந்த இக்கட்டான நிலைக்குத் தள்ளின. குறிப்பாக, ஜிம்பாப்வே மற்றும் இலங்கை அணிகளுக்கு எதிரான போட்டிகளில் ஆஸ்திரேலியா சந்தித்த அதிர்ச்சித் தோல்விகள், அவர்களின் புள்ளிக் கணக்கை மிகவும் பலவீனப்படுத்தின.

அணியின் தோல்விக்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. முக்கியமாக, அனுபவம் வாய்ந்த வேகப்பந்து வீச்சாளர்களான ஜோஷ் ஹேசில்வுட் மற்றும் பேட் கம்மின்ஸ் ஆகியோர் காயம் மற்றும் பணிச்சுமை காரணமாக அணியில் இடம்பெறாதது பெரும் பின்னடைவாக அமைந்தது. அதேபோல் பேட்டிங் வரிசையில் கேப்டன் மிட்செல் மார்ஷ் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் சீரான ரன்களைக் குவிக்கத் தவறியது அணியின் நம்பிக்கையைத் தகர்த்தது. ஆரம்பத்தில் அயர்லாந்து அணிக்கு எதிராகப் பெற்ற வெற்றியால் உருவான உற்சாகம், அடுத்தடுத்த போட்டிகளில் தொடரவில்லை. இந்தத் தோல்வி ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்திற்கும் ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளதோடு, அணியின் எதிர்காலக் கட்டமைப்பு குறித்த கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

